1990 ஏப்ரல் 12]

நரிக்குறவர், நாவிதர் மற்றும் சலவைத் தொழிலாளர்களை தாழ்த்தப்பட்டோர் சமூகத்தில் இணைத்தல்.

*1563—திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள நரிக்குறவர், நாவிதர், சலவைத் தொழிலாளி ஆகியோரை தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டிலுள்ள நரிக்குறவர் இனத்தைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கலாம் என மைய அரசுக்கு ஏற்கெனவே பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நாவிதர் இனத்தைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதுபற்றி அரசின் ஆய்வில் உள்ளது, சலவைத் தொழிலாளரினத்தைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில்சேர்ப்பது குறித்து ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டு தற்போதுள்ள நிலையே நீடிக்கலாம் என அரசு முடிவு எடுத்துள்ளது.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே. அதேபோன்று 'போயர்' இனத்தைச் சேர்ந்தவர்கள் கூட கிராமப் புறத்திலே தீண்டத் தகாதவர்களாக வீட்டிலேயே அனுமதிக்காத நிலை இருக்கிற காரணத்தால் அவர்களையும் தாழ்த்தப்பட்டோர் இனத்திலே சேர்ப்பதற்கான ஆய்வு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பட்டியல் குடியரசுத் தலைவர் ஆணையாக மத்திய அரசால் வெளியிடப்படுபவை ஆகும். இப்பட்டியல்களில் ஏதேனும் திருத்தம் செய்ய வேண்டுமென்றால் அது பாராளுமன்ற சட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். அதற்கான அதிகாரம் மைய அரசிற்கு மட்டுமே உள்ளது. மாநில அரசிற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நரிக்குறவர்கள் எந்தப் பட்டியலில் இருக்கிறார்கள்? மருத்துவக் கல்லூரி, என்ஜினீயரிங் கல்லூரி அல்லது அரசாங்க வேலை வாய்ப்புக்களில் ஏதாவது இருக்கிறார்களா என்ற தகவலை அரசின் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நரிக்குறவர்கள் இனம் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கக் கோரி, இவ்வரசு ஏற்கெனவே மைய அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளது. அது மைய அரசின் பரிசீலனை

யில் உள்ளது. இதுவரை எத்தனை பேர் வேலைவாய்ப்பில் இருக்கிறார்கள் என்ற பட்டியலை, தனி வினா எழுப்பினால் அதற்குள்ள விளக்கமான விடையை அளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிக்குறவர்கள் ஏற்கனவே எஸ்.சி.யில் இருக்கிறார்கள். சலவைத் தொழிலாளர்களும் அப்படியே இருந்து கொண்டிருக்கிறார்கள். நாவிதர்களுக்கு பரிசீலனை செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, கிராமப்புறங்களிலே இருக்கிற நாவிதர்களும், சலவையாளர்களும், அந்த அரிஜன மக்களுக்கு சலவை செய்வதும் இல்லை. ஷேவ் செய்வதும் இல்லை. அவர்களைக் கொண்டு போய் இந்த லிஸ்ட்டில் சேர்த்தால் அது எங்கே போய் முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன.

9.50 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. கணேசமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் மலைப் பகுதியில் மலைவேளாளர் என்ற ஒரு இனம் இருக்கிறது. அதை எந்தப் பட்டியலிலும் சேர்க்காமல் அவர்கள் ஜாதி சான்றிதழ் பெறுவதற்கு தகுதிகூட இன்றைக்கு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இந்த அரசு சேர்க்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி ஏற்கெனவே நான விளக்கமாக பதில் அளித்து இருக்கிறேன். எந்த இனத்தையும் தாழ்த்தப்பட்ட இனத்தில், பழங்குடி இனத்தில் சேர்க்கவோ, விலக்கவோ மத்திய அரசுக்குத் தான் அதிகாரம் உண்டு. மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்பதை பலமுறை தெரிவித்து இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நரிக்குறவர்கள் கூடியமட்டும் புலோட்டிங் பாப்புலேஷன் மாதிரி கிராமத்தை விட்டு கிராமம் போய்க்கொண்டிருக்கிறார்கள். மொபைல் மாதிரியாக அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் லம்பாடி என்ற ஒரு வகையறா இருக்கிறார்கள். அவர்களும் அந்த லம்பாடி இனமும் மொபைல் மாதிரி புலோட்டிங் பாபுலேஷன் மாதிரிதான் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் இந்த தாழ்த்தப்பட்ட இனத்தில் சேர்க்கப்படுவார்களா என அறிய விரும்புகிறேன்.